**செ. கு. எண்:47** **நாள்: 21.02.2021**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 21.2.2021

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், கொங்க வேம்பு தரப்பு, எஸ். பட்டி கிராமம், சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தவர்கள் மீது இன்று **(21.2.2021)** நான்கு சக்கர வாகனம் மோதியதால், திருமதி வெண்மணி, செல்வன் ஸ்ரீநாத் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயும், திருமதி சிவலட்சுமி, மருத்துவமனைக்கு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் இரண்டு நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் வருத்துமடைந்தேன்.

இந்த விபத்து குறித்து அறிந்தவுடன் மீட்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிப்பதை உறுதி செய்து கொள்ளவும் மாவட்ட நிர்வாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

**இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவருக்கு 50,000/– ரூபாயும், லேசான காயமடைந்தவருக்கு 25,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

இச்சம்பவம் தொடர்பாக வாகன ஓட்டுநர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**